மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பதினைந்து பேர்களில் 5 பேர்கள் வெவ்வேறு வேலைகளுக்குப் போய்விட்டார்கள். பாக்கியுள்ள 11 பேர்களில் 9 பேர்களுடைய பிரச்சினையும் தீர்க்கப்பட்டு அவர்கள் ரெகுலரைஸ் செய்யப்பட்டு, இன்க்ரிமெண்ட் எல்லாம் வழங்கப்பட்டு விட்டது. மற்றவர்களைப் பற்றியும் நடவடிக்கை எடுக்க விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. விவரங்கள் கிடைத்த பிறகு என்ன செய்யலாம் என்பது யோசிக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : மின்சார வாரியத்தில் இருந்து கொஞ்ச காலத்திற்கு முன் வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டு திரும்பியவர்களின் சம்பளம், அலவன்சு முதலியன இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா? உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் கிடைக்கவில்லை. கனம் அங்கத்தினர் அந்த விவரங்களைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

Autorickshaws

*5 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works Department be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of autorickshaws plying in the City of Madras and to permit the plying of autorickshaws in other districts; and

(*b*) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சென்னை மாநகரில் ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : 1967-68-இல் இந்த ஆட்டோ ரிக்ஷாக்களினால் ஏற்பட்ட விபத்துகள் எவ்வளவு? அவற்றில் மரணம் அடைந்தவர்கள் எவ்வளவு? காயம் அடைந்தவர்கள் எவ்வளவு? ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு ஸ்பீட் லிமிட் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதல் கேள்வி விபத்துக்களைப் பற்றியது அல்ல. அப்படி ஒரு கேள்வி கேட்டால் விவரம் தர உதவியாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சென்னையை அடுத்த பெரிய நகரமாக மதுரை விளங்குவதன் காரணத்தினால் மதுரையில் மேலும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா?

1968 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மதுரையில் அதிகமான ஆட்டோ ரிக்ஷாக்கள் தேவைப்படுகின்றன என்கிற வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டால் அதுபற்றி பரிசீலித்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஏழைகளின் வாகனம் ஆட்டோ ரிக்ஷாக்கள்தான். முன்பு இருந்த அரசாங்கம் அதை விஸ்தரிப்பது இல்லை என்று தடுத்து நிறுத்திவிட்டார்கள். இப்போதுள்ள அரசாங்கமாவது ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்பு 199 ஆட்டோ ரிக்ஷாக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. அதற்குமேல் அனுமதிக்க வேண்டியதில்லை என்பதாக காவல்துறை அதிகாரிகள் அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருந்தார்கள். அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு அந்த 199 ஆட்டோ ரிக்ஷாக்கள் போதுமானது, மேலும் சென்னை நகரைப் பொறுத்தவரையில் அதை விஸ்தரிக்க வேண்டியதில்லை என்பதாக சென்ற அரசு தீர்மானித்திருந்தது. இந்த அரசும் அந்த முடிவினையே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

Dr. H. V. Hande : Autorickshaw drivers go out of the job once the autorickshaws go off the roads on account of their not being allowed to ply on the roads. Will the Government come forward to see that these autorickshaw drivers are given training as drivers of private or Government buses and are given differential or preferential treatment as far as employment is concerned ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது புதிதாக யாரும் வேலையை விட்டுப் போய்விடவில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே 199 ஆட்டோ ரிக்ஷாவாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இப்போது நாம் அந்த எண்ணிக்கையைக் குறைக்கவில்லை. அப்போது வேலை இழந்திருக்கக்கூடியவர்கள் அப்போதே வேறு வேலைகளுக்குப் போய் இருக்கக்கூடும்.

திரு. கே. விநயகம் : ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு இப்போது கிராக்கி ஏற்பட்டிருப்பதன் காரணமே இப்போதிருக்கிற டாக்ஸி மீட்டர்களை அதிகப்படுத்தி இருப்பதுதான். ஆகவே, இன்றைக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் கிடைக்கவில்லை என்றால்தான், அநேகமாக டாக்சிகளை உபயோகப்படுத்திக்கொள்ள முன் வருகிறார்கள். ஆகவே மக்கள் நலனைக் கருதி ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை நூற்றுக்கும் அதிகமாக உயர்த்த இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆட்டோ ரிக்ஷாக்களை ஏன் அதிகப்படுத்தத் தேவையில்லை என்பதற்கு காவல்துறை ஆணையர் குறிப்பிட்டுள்ள காரணங்களை இங்கே குறிப்பிடுவது நல்லது என்று கருதுகிறேன். மூன்று சக்கர வண்டி பயணிகளின் பாதுகாப்புக்கு ஏற்றதல்ல என்பது ஒன்று. போக்குவரத்து நெருக்கடியுள்ள இடங்களில் அந்த மூன்று சக்கர வண்டிகளினால் திடீரெனத் திரும்ப முடியாது என்பது ஒன்று. அடுத்து இந்த வண்டிகள்

மிகுந்த இரைச்சலை உண்டாக்குகின்றன என்பது ஒன்று. நிறையப் புகை விடுவதனல் அது பொதுமக்களுக்குத் தீங்கானது என்பது ஒன்று. அடுத்து, தானே இயங்கும் மின்விளக்குக் கைகாட்டி உள்ள இடங்களில் மிக விரைவாக அவற்றினல் கடக்க முடியவில்லை என்பது ஒன்று. இதனல் போக்குவரத்து தடைபடுகிறது. இப்படிப் பல காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றின் காரணமாக 199-க்கும் அதிகமாக ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்க வேண்டாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : கோவை நகரத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மீட்டர் பொருத்தப்பட்டிருந்தும் அதிகமான அளவுக்குப் பொதுமக்களிடத்தில் இருந்து கட்டணம் கேட்கிறார்கள், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அது குறித்துக் குறிப்பாக எழுதி அனுப்பினல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : வளர்ந்துவரும் நகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், பலர் இதை ஜீவனேபாயமாகக் கொள்வதற்கும் இந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் உதவிகரமாக இருக்கின்றன. ஆகவே, ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : சென்னையைத் தவிர ஏனைய நகரங்களில் அந்த யோசனை தெரிவிக்கப்பட்டால் அது பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன் : ஆட்டோ ரிக்ஷாக்களை அதிகப்படுத்துவதனல் குதிரை வண்டிக்காரர்கள் வேலை இழக்கவும், புல் கட்டுகளை விற்றுப் பிழைக்கிற தாய்மார்கள் பாதிக்கப்படவும் கூடும் என்பதனல் மாவட்டங்களில் ஆட்டோ ரிக்ஷாக்களைப் புகுத்தாமல் இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இப்படி பல்வேறு திசைகளில் இருந்து எதிர்ப்புகள் வருவதால்தான் அரசாங்கம் தன்னுடைய முடிவை மாற்றுது வைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஆட்டோ ரிக்ஷாவுக்கு அழகுத் தமிழ்ப் பெயரை அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இப்போது ஆட்டோ ரிக்ஷா என்றே குறிப்பிடலாம். பிறகு மாற்றிக்கொள்ளலாம்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether this Government will run autorickshaws as a public sector undertaking in Madras City?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இப்போது உத்தேசம் இல்லை.